அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 07/2016

எனது இல : EST-6/LEAVE/03/3162

அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2016.12.29

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>தாபனவிதிக் கோவைக்கு புதிதாக ஒப்பந்த மாதிரியொன்றை உட்சேர்த்தல்</u>**

2014.05.19 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 09/2014 மற்றும் 2015.04.15 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் 01/2015 தொடர்பாக தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. அச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய தமது துணைவருடன் வெளிநாடொன்றுக்குச் செல்லும் அரசாங்க அலுவலர்கள் 33 ஆவது பின்னிணைப்பாக தாபன விதிக் கோவையில் உட்சேர்க்கப்படும், இவ் இணைப்பு 01 மாதிரிப்படித்திற்கு அமைய ஒப்பந்தமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும், தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 16:5 ஆம் உப பிரிவு பின்வரும் வகையில் திருத்தியமைக்கப்பட வேண்டும் எனவும் 2016.05.03 ஆந் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

16:5 விடுமுறை வழங்கப்படுவது கற்கை தொடர்பாக எனில், 9 ஆவது பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறும், தொழில் தொடர்பாக எனில், 10 ஆம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறும் அலுவலர் ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடல் வேண்டும். கற்கையைத் தொடர்வதுடன் தொழில் புரிவதையும் நோக்காக கொண்டு விடுமுறை வழங்கப்படும் போது, பயன்படுத்த வேண்டிய மாதிரிப் படிவம் 11 ஆம் பின்னிணைப்பின் படி அமைதல் வேண்டும் என்பதுடன், தனது துணைவர் வெளிநாட்டு புலமைப் பரிசில் ஒன்று தொடர்பாக தேர்ந்தெடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவருடன் வெளிநாடு செல்லும் அலுவலர் 33 ஆம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறும் ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிடல் வேண்டும்.

ஒப்பம்./ ஜே. ஜே. ரத்னசிரி

செயலாளர்

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

## 33 ஆவது பின்னிணைப்பு

(XII – 16:1:9)

### உயர் கல்வியின் பொருட்டு வெளி நாட்டுக்குச் செல்லும் அரச உத்தியோகத்தருடன் சம்பளமற்ற விடுமுறை

### பெற்றுச் செல்லும் அரச சேவையிலுள்ள வாழ்க்கைத்துணை கைச்சாத்திடப்பட வேண்டிய ஒப்பந்தப் படிவம்

(தாபனப் பணிப்பாளர் நாயத்தின் அனுமதியின்றி இப்படிவத்தினை திருத்தம் செய்தலாகாது.)

(இங்கு உத்தியோகத்தர் எனக் குறிப்பிடப்படும்) (1) -------------------- என்பவர் ஒரு கட்சிக்காரராகவும் (இங்கு அரசாங்கம் எனக் குறிப்பிடப்படும்) இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் பொருட்டு மற்றும் சார்பாகச் செயற்படும் (இங்கு (2) --------------------- எனக் குறிப்பிடப்படும்) இலங்கையின் (3) ----------------------- பதவி வகிக்கும் (2) ---------------------------- மற்றைய கட்சியாளரும் உடன்பட்டு ( (3) ---------------------- பதவி வகிக்கும் கூறப்பட்டுள்ள (3) -------------------- இன் பின்னர் அப் பதவியின் பொருட்டு அவ்வப்போது நியமிக்கப்படும் அவரது அடுத்து வருபவர்களும் (3) ------------------ என்னும் பதத்திற்கு உட்படுபவர்களாவர்.)
இரு சாராரும் வருடம் இரண்டாயிரத்து ------------- ஆம் ஆண்டு ------------ மாதம் ---------------ஆந் திகதி எழுதி கையொப்பமிடப்படும் ஒப்பந்தப் பத்திரமாகும்.

(5) ------------------ இற்கு XII அத்தியாயத்தின் 16:1:9 பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய வாழ்க்கைத் துணையுடன் செல்வதற்கு ஏற்றவகையில் அவ் உத்தியோகத்தர் முதற் தடவையாக (4 )----------------- மாத காலத்தின் பொருட்டு சம்பளமற்ற விடுமுறைக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாலும்,

தற்போது இங்கு எழுதி கையொப்பமிடும் ஒப்பந்தத்தின் விபரங்கள் இவ்வாறாகும் :-

(1) (5) -------------------- இற்கு XII அத்தியாயத்தின் 16:1:9 பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய வாழ்க்கைத் துணையுடன் செல்வதற்கு ஏற்றவகையில் மேற்படி உத்தியோகத்தருக்கு 20 -------- ஆந் திகதி தொடக்கம் (4) -------------- மாத காலத்திற்குச் சம்பளமற்ற விடுமுறையினைப் பெற்றுக் கொள்வதற்கு சம்பளமற்ற விடுமுறையை அனுமதிப்பதற்கு அரசு உடன்படுகின்றது.

(2) இவ் உத்தியோகத்தர் :-

(i) இங்கு கூறப்பட்ட (3) --------------------- இன் முன் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளாது, கூறப்பட்டுள்ள சம்பளமற்ற விடுமுறையில் மிகுதியாகவுள்ள எந்தவொரு காலப்பகுதியையும் வேறு எவ்விதமான காரியத்திற்காகவும் ஈடுபடுத்தபட மாட்டாது எனவும்,

**(1) உத்தியோகத்தரின் முழுப் பெயர் மற்றும் பதவிப் பெயர்**

**(2) நிறுவனத் தலைவரின் முழுப் பெயர்**

**(3) நிறுவனத் தலைவரின் பதவிப் பெயர்**

**(4) சம்பளமற்ற விடுமுறைக் காலம்**

**(5) வாழ்க்கைத் துணையுடன் செல்லும் நாடு**

(7) கட்டாய சேவைக் காலம் (கணக்கிடப்பட வேண்டியது XII வது அத்தியாயத்தின் 16:15 உப பிரிவிற்கமைய)

(ii) மேற் கூறப்பட்டுள்ள சம்பளமற்ற விடுமுறைக் காலம் முடிவுறல் அவ்வாறு இல்லையெனில் வாழ்க்கைத் துணையின் கல்வி/பயிற்சிப் பாடநெறி முடிவுறல் ஆகிய இரண்டில் ஏதாவதொன்று முதலாவதாக இடம் பெற்றவுடனேயே இலங்கைக்கு மீளத் திரும்பி அரசு எடுக்கும் தீர்மானம் இறுதித் தீர்மானமாக ஏற்றுக் கொள்வதற்கு கட்டுப்பட்டு அரசு பணிக்கும் பிரகாரம் ஏதாவதொரு பதவியில் வேலையை பாரமேற்று கடமையை பாரமேற்றுக் கொண்ட திகதி தொடக்கம் (7) --------------------- மாதங்களுக்குக் குறையாத காலத்தை அரசின் கீழ் சேவையாற்றுவதற்கு கட்டுப்படுவதாகவும்,

(8) தண்டப் பணம் (இதனை XV வது அத்தியாயத்தின் 5:2 வது உப பிரிவிற்கமைய கணக்கிடல் வேண்டும்.)

(iii) அவர் அல்லது அவள் அனுமதிக்கப்பட்ட சம்பளமற்ற விடுமுறை முடிவடைந்ததும் இலங்கைக்கு மீள வருவதை உதாசீனம் செய்தால் அல்லது இலங்கைக்கு மீளத் திரும்பிய பின்னர் மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசின் கீழ் வேலையைக் கையேற்பதற்குத் தவறினால் மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசின் கீழ் வேலையைக் கையேற்ற பின்னர் வேலையைக் கையேற்ற திகதி தொடக்கம் ஆகக் குறைந்தது (7) --------------------- மாதகாலம் முடிவுறுவதற்கு முன்னர் அரசில் சேவையாற்றுவதற்கு தவறின் அல்லது மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு வேலையைக் கையேற்ற பின்னர் கூறப்பட்டுள்ள (7) --------------------- மாதகாலம் முடிவுறுவதற்கு முன்னர் அரசின் கீழ் வகிக்கும் நியமனத்திலிருந்து விட்டுவிலகினால் அல்லது கூறப்பட்ட (7) ---------------------- மாதகாலம் முடிவுறுவதற்கு முன்னர் வினைத்திறன் அற்ற காரணத்தால் அல்லது செலவைக் குறைத்தல் போன்ற காரணங்கள் தவிர்ந்த வேறு ஏதாவதொரு காரணத்தால் வேலை நீக்கம் செய்யப்பட்டால், அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது அவ்வாறு இல்லையெனில் இவ் ஒப்பந்தத்தின் ஏனைய நிபந்தனைகளில் எவையேனும் ஒன்றைக் கடைப்பிடிப்பதற்கு தவறின் அல்லது தாங்கள் இலங்கையில் செல்லுபடியாகும் பணத்தில் ரூபா (8) ------------------ அரசிற்குச் செலுத்துவதாகவும்,

உடன் படுகின்றார்.

(3) தனக்கு வழங்கப்பட்டுள்ள சம்பளமற்ற விடுமுறைக் காலத்தை நீடிக்கும் படி அவ் உத்தியோகத்தர் வேண்டுகோள் விடுக்கும் போது அரசின் தற்றுணிவின்படி அச் சம்பளமற்ற விடுமுறைக் காலத்தை அடிக்கடி நீடிப்பதற்கு அரசிற்கு இயலும் எனவும் இரு சாராருக்கிடையே இத்தால் மேலும் ஒப்பந்தம் செய்யப்படுகின்றது. எவ்வாறாயினும் சம்பளமற்ற விடுமுறைக் காலம் அவ்வாறு நீடிக்கப்படும் போது, மீளக் கடமையைக் கையேற்றுக் கொண்டதன் பின்னர், கடமையாற்ற வேண்டிய கட்டாயக் சேவைக் காலத்தை அரசு தீர்மானிக்கும். மேலும் மேலதிகக் காலத்தையும், அவ்வாறே ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறின் மேற்படி உத்தியோகத்தர் செலுத்த வேண்டிய பணத்தை அரசு தீர்மானிக்கும். மேலும் மேலதிகப் பணத்திற்கு விகிதசமமாக அதிகரித்தல் வேண்டும்.*

*** கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புக்களைப் பார்க்கவும்.**

(4) சம்பளமற்ற விடுமுறைக் காலம் அவ்வாறு நீடிப்பின் பின்னர் உத்தியோகத்தர் சேவையாற்றுவதற்குக் கட்டுப்பட்டுள்ள ஆகக் கூடிய கட்டாய சேவைக் காலத்தை, மற்றும் இவ் ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் மீறின் உத்தியோகத்தர் செலுத்த வேண்டிய பணத்திற்கு விகிதசமமாக அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில், இவ் ஒப்பந்தத்தில் தற்போது குறிப்பிடப்பட்டுள்ள சம்பளமற்ற விடுமுறைக் கால எல்லை, கட்டாய சேவைக் காலம் மற்றும் உத்தியோகத்தர் செலுத்த வேண்டிய பணம் என்னும் இவற்றிற்குப் பதிலாக அவ் சம்பளமற்ற விடுமுறைக் கால எல்லைகளின் மொத்தத் தொகையையும் கட்டாய சேவைக்கால எல்லைகளின் மொத்தத் தொகையையும் உத்தியோகத்தர் செலுத்த வேண்டிய பணத்தின் மொத்தத் தொகையையும் இவ் ஒப்பந்தத்தில் அதற்குப் பொருத்தமான பிரிவுகளின் தொடர் முறையே உட்படுத்தப்பட்டிருப்பதாகக் கருதி கூறுவதற்கும் அவ்வாறு புரிந்து கொள்வதற்கும் இத்தால் ஒப்பந்தம் செய்யப்படுகின்றது.*

(5) சம்பளமற்ற விடுமுறை முன்னமே முடிவுற்ற காரணத்தால் உத்தியோகத்தர் இலங்கைக்கு வருமிடத்து, மேற்குறிப்பிடப்பட்டுள்ள (7) -------------------------- மாத காலத்திற்கு அவர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அரசு கட்டுப்பட்டுள்ளதாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எவையேனும் கருதுவதாகக் கருத்திற் கொள்ளலாகாது.

(6) மேற்படி 2,3 மற்றும் 4 பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயம் தொடர்பாகவும் (3) ------------------- இனால் அல்லது அவருக்குப் பதிலாக கையொப்பமிட்ட சான்றிதலொன்றை, அதில் அடங்கியுள்ள விடயங்கள் அல்லது அதில் இடப்பட்டுள்ள கையொப்பத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு மேலதிகமாக அல்லது வேறு காரணங்கள் இல்லாதவிடத்து, பார்த்த பார்வைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய சாட்சியாக இத்தால் ஒப்பந்தம் கைசாத்திடப் படுகின்றது.

(7) (2) -------------------------------- என்னும் பதத்தினால் கருதப்படுவது (2) -------------------------- பதவி வகிப்பவர் அல்லது அப் பதவியில் பதிற் கடமையாற்றுபவரான (2) ---------------------- என்பவரினால் தற்போது மேற்கொள்ளப்படும் கடமைகளை முன்னர் நிறைவேற்றிய உத்தியோகத்தராவார்.

இதற்குச் சாட்சியாக இவ் ஆவணத்துடன் தொடர்புடைய இரு சாரார்களினாலும் இரண்டாயிரம் -------------------- ஆண்டு ---------------- மாதம் ------------------ ஆந் திகதியான இன்றைய தினம் ----------------- இல் கையொப்பமிடப்பட்டது.

இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் பொருட்டும் அதன் சார்பாக (2) ---------------- கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டதாக,

கையொப்பம் : ------------------------------
பதவிப் பெயர் : --------------------------------

சாட்சியாளர்கள்:-

1. கையொப்பம் :----------------------
   பெயர் :-------------------------------
   முகவரி :-----------------------------

2. கையொப்பம் :-----------------------
   பெயர் :-------------------------------
   முகவரி :----------------------------

இங்கு (1) ....................................கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டதாக, கையொப்பம்:----------------------

சாட்சியாளர்கள்:-

1. கையொப்பம் :-----------------------
   பெயர் :-------------------------------
   முகவரி :-----------------------------

2. கையொப்பம் :-----------------------
   பெயர் :-------------------------------

*குறிப்பு–

(1) உத்தியோகத்தரொருவரது சம்பளமற்ற விடுமுறைக் காலத்தை ஒப்பந்தப் படிவத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தை நீடிக்கும் போது அதற்குச் சமமான கட்டாய சேவைக் காலத்தையும் தண்டப் பணத்தையும் அதிகரித்தல் வேண்டும்.

(2) அதிகரிகப்பட்ட கட்டாய சேவைக் காலம் மற்றும் அதிகரிக்கப்பட்ட தண்டப் பணத்தை விடுமுறையை நீடிக்கும் சந்தர்ப்பத்திலேயே உத்தியோகத்தருக்கு அறிவித்து அவரது விருப்பத்தை ஆவணமாகப் பெற்றுக் கொண்டு அதனை ஒப்பந்தத்துடன் கோவையிலிட்டு வைத்திருத்தல் வேண்டும்.